தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 விடை (25-5-1987) 85 காசுகள் (இதழ் எண் : 86)

இலங்கைத் தமிழரை அடியோட்டழிக்க எண்ணுகிறார் செயவர்த்தனே!

இந்திய அரசை அதில் தலையிடச் செய்ய தமிழகக் கோரிக்கையை எழுப்புவதே தக்கதீர்வு!

வன்முறையை ஒடுக்குவது என்னும் பெயரால், இலங்கையிலுள்ள தமிழர்களை ஒட்டுமொத்தமாக அழித்தொழிக்க இருபதாம் நூற்றாண்டு இட்லர் செயவர்த்தனே திட்டமிட்டுவிட்டார். இந்நிலையில் உலகத்தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு அவர்களைக் காத்தாக வேண்டும். இந்திய அரசோ, இஃது அயல்நாட்டுச் சிக்கல் என்று சொல்லி, செயவர்த்தனே செய்யும் இனஅழிவு முயற்சிகளைத் தடுத்து நிறுத்தத் தயக்கம் காட்டுகிறது.

இங்குள்ள தமிழினத் தலைவர்களும் இக்கால் ஒன்றும் செய்வதற்கு இயலாமல் கையற்ற நிலையில் வெறுமனே வாயெதிர்ப்பை மட்டுமே காட்டிவருகிறார்கள். இவ்விக்கட்டான நிலையில் வெறும் வாயெதிர்ப்புகளோ, பேரணிகளோ, உணர்ச்சி ததும்பும் அறிக்கைகளோ ஒன்றுக்கும் பயனில்லாமல் போய்விடும். எனவே இந்திய அரசை இவ்வகையில் உணர்வடிப்படையில் ஊக்கம் கொண்டு இயங்கச் செய்யத் தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்னும் கோரிக்கையை இங்குள்ள முதல்வரிசைத் தமிழ்த்தலைவர்கள் எழுப்புதல் வேண்டும். இதுவே நாம் எதிர்பார்க்கும் பயனை விளைவிக்கும். இயலுமானால், இவ்வெதிர்ப்புக் குரலை இங்குளளவர்கள் அனைவரும் ஒருமுகமாக எழுப்பியாக வேண்டும். ***தமிழினத் தலைவர்கள் செய்வார்களா?***

Scanned with CamScanner

ஐயோ தமிழகமே!

கழகங்களும் தேசியமும்!

அண்மையில் சண்டிகாரில் அனைத்துக் கட்சிகளின் மாநாட்டில் பஞ்சாப் பிரிவினையை எதிர்த்து நம் தமிழகத்திலிருந்து தி.மு.க., அ.தி.மு.க. படிநிகராளிகள் பேசுகையில், இந்தியாவில் பார்ப்பனியமும் முதலாளியமும் இணைந்து ஆளுகின்ற இந்திய அரசையும் அதற்குத் துணை போகின்ற பர்னாலாவையும் ஆதரித்துப் பேசியுள்ளனர். மேலும் இந்தியா ஒரு தேசிய இனங்களின் சிறைக்கூடம் என்பதையும் மறந்து நம் தமிழகத்தைத்தான் இந்திய அரசிலிருந்து பிரிக்க முடியவில்லை, பஞ்சாப் மக்களாவது விடுதலை பெறுகிறார்களே என்று பெருமை கொள்ளாமல், சீக்கிய விடுதலைப் போராளிகளை ஒடுக்க வேண்டும் என்றும் இந்திய அரசுக்கு ஆதரவாகப் பேசியிருக்கின்றனர். இந் நிலையில், நாம் இக் கழகங்கள் இன்னும் இந்தியத் தேசிய நீரோட்டத்திலேயே மூழ்கிக் கொண்டிருக்கின்றன என்றும் அதிலிருந்து விடுபடாது மூழ்கி விடும் என்றும் எண்ண வேண்டியிருக்கிறது. —*பொதுநல வேட்பன்.*

கண்டு களியுங்கள்!

இராசீவ் - செயவர்த்தனே நாடகத்தில் இடையில் ஒரு நடிகை. *சிரிமாவோ பண்டாரநாயகா*தான் அவர். இந்திய-இலங்கை உறவைச் சீர்கெடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்க வேண்டாம் என இராசீவுக்குத் தொலைவரி கொடுத்திருக்கிறார் அவர். • நின்றிருப்பவனைப் பார்த்து ஓடாதே எனப் பதறுவதும், சிரிப்பவனைப் பார்த்துச் சினம் கொள்ளாதே எனக் கெஞ்சுவதும், அணைப்பவனிடம் அடிக்காதே எனக் கத்துவதும் அருமையான (நாடக) உத்திகள்தாம். கலையுணர்வு கொண்ட தமிழர்களே! கண்டு களியுங்கள்! - வ.மு.

உணர்வற்ற தமிழனுக்கு!

தென்கொரியாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் 400 அயிரமாத்திரி(400 மீட்டர்) ஓட்ட விளையாட்டில் முதலில் ஓடியும், தங்கப் பதக்கத்தைத் தவறவிட்டவரான பெண் வீராங்கனை *சைனி ஆப்ரகாம்,* தமிழகத் தொலைக்காட்சியின் நேர்காணலில் நேர்காணல் கண்டவர் ஆங்கில மொழியில் வினா எழுப்ப, வீராங்கனை, தமக்கு மும்மொழியான மலையாளம், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகள் தெரிந்தும், அவர் தாய் மொழியான மலையாள மொழியிலேயே விடை பகர்ந்தார். இதிலிருந்து நாம் படிப்பினை கற்றுக் கொள்வது யாதெனில் எந்த நிலையிலும், எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், தாய் மொழியைப் போற்ற வேண்டும் என்பதைத் தமிழன் ஒவ்வொருவனும் உணர வேண்டும் என்பதே!

—ப. சிவபெருமான்.

வீரமணி சிந்தாபாத்!

தஞ்சையில் நடந்த குமுகாய நயன்மைப் பாதுகாப்பு மாநாட்டிற்கு எழுதப்பட்டுள்ள சுவரெழுத்து விளம்பரத்தில் "*சிந்தாபாத்! சிந்தாபாத்! வீரமணி சிந்தாபாத்!*" என்று இந்தி முழக்கத்தை ஆங்கிலத்தில் எழுதியிருந்தனர்.

(அடுத்த மாநாட்டிற்கு இந்தியிலேயே எழுதுவார்களோ இந்த இந்தியெதிர்ப்பாளர்கள்?)

ஆரியத்தை ஒழிக்கத் திரவிட நாடு கேட்டுத் தமிழினம் எண்ணித் தமிழ்நாடு முழங்கி விட்டு, இப்பொழுது பகுத்தறிவு ஓர் இந்தியா காண 'சிந்தாபாத்' முழங்கப் போய்விட்டார்களா இந்தத் தமிழ் இனப்(!)பற்றாளர்கள்? தமிழா! எண்ணிப் பார்! தமிழகத்தில், 'சிந்தாபாத்'துக்கென்ன தேவை? அதுவும் தமிழினப் படைத் தலைவர்க்கு அது வேண்டுமோ? — வி. வே.

எங்கே போய் முட்டிக் கொள்வது?

பார்ப்பன சிவசங்கரியின் படத்தை 'உண்மை' இதழட்டையில் போட்டுள்ளதையும் அவர் தமிழினப் படைத்தலைவர் பற்றிக் கூறியதையும் பற்றி, தி. க. தோழர் ஒருவர் கூறிக் கொண்டிருந்தபொழுது, சிவசங்கரியின் மண்டையை அவர் வியந்ததைப் பார்த்து, எங்கள் மண்டையை எங்கு போய் முட்டிக் கொள்வது என்று தெரியாமல் விழித்தோம்!

பகுத்தறிவுத் தாசர்!

இயேசு தூதுவராகத் தம் பெயரைக் கொண்டுள்ள திருச்சி ஞான குரு(!) ஒருவர், சீர்காழியின் இந்து தெய்வப் பாடல்களின் சுவைஞராகவும் படைத் தலைவரின் பகுத்தறிவுத் தாசராகவும் இருப்பதைக் காணும் பொழுது நமது பகுத்தறிவுக்கு மயக்கமே வரும் போல இருக்கிறது! -வி.வே.

பேராயத்தின் இரட்டைப்புனைவு

குடியரசுத் தலைவருக்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கும் அதிகாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசிய போது, ப. சிதம்பரம் 'இந்த நாட்டில் மீண்டும் ஒரு முடியாட்சி உருவாக அனுமதிக்க மாட்டோம்' என்று பேசியுள்ளார். தந்தை, தந்தைக்குப் பின் மகள், மகளுக்குப்பின் பெயரன் என ஆண்டு வரும் முறைமைக்கு என்னபெயர் என்று நல்லடிமைச் சிதம்பரம்தான் சொல்ல வேண்டும்.

மேலும் முதன்முதலில் குடியரசுத் தலைவர் பற்றிய சிக்கல் எழுந்தபோது பேராயக் கட்சியைச் சார்ந்தோர் குறிப்பாக அவைத்தலைவர் பலராம் சாக்கர், 'அப் பதவி மிகப் புனிதமானது; அதைப் பற்றித்திறனாய்வு செய்யக் கூடாது' என்று கூறினர். நேரத்திற்குத் தக்கபடி கருத்துகளை மாற்றிக் கொள்வது என்பது பேராயக் கட்சி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து வழக்கிலுள்ளது. என்ன செய்வது? -*தமிழ்முகிலன்.*

சிறப்பாசிரியர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தென்மொழி மா. பூங்குன்றன்.

துணையாசிரியர்கள்:
தென்மொழி. கல்லை. அருட்செல்வன்
தென்மொழி. மா. பொழிலன்

கருத்தாளர் குழு:
பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. மா. சித்திரச்
செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காலூர். பொற்செழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
மா. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்னொளியன்,
கி. குணத்தொகையன்.

கட்டுரையாசிரியர் குழு:
பாவலர். கடலூர் மணிமாறன்,
பாவலர். இளஞ்சித்திரன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். கொ. செ. சின்னப்பனார்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து,

உதவியாளர் குழு:
அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்.

அச்சீட்டாளர்:
தாமரை பெருஞ்சித்திரனார்.
தென்மொழி மின் அச்சகம்.

கழக வேளிர்:
தென்மொழி. இரா. இளம்பிறைச்
செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:
தென்மொழி. நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்:
தென்மொழி. ந. முத்துக்குமரன்,
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி. ந. அரிமாவளங்கோ,
எசு. ஆர். எசு. பிரான்சிசு,
தென்மொழி. ஆறிறைவன்.

கட்டணம்:

	உள்நாடு	வெளிநாடு வான்	வெளிநாடு கடல்
தனியிதழ்	0-85	6-00	4-00
ஆண்டுக் கட்டணம்	44-00	320-00	220-00
அரையாண்டுக் கட்டணம்	22-00	160-00	110-00
வாழ்நாள் உரு.	750	5000	3500

தொடர்பு முகவரி:
தமிழ்நிலம் சென்னை-600005.
தொலைபேசி: 847829

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும், உணர்வும், உயிர்ச்செறிவும்
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்; எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 விடை (25-5-1987) இதழ் எண்-86

பிசித்தீவிலும் தமிழினத்துக்கு ஓர் இக்கட்டான நிலை!

தமிழர்கள் மிகப் பெரும்பான்மையினராக வாழும் நாடுகளில் பிசித்தீவும் ஒன்று. இன்னொன்று, தமிழர்கள் சென்று வாழும் நாடுகளிலெல்லாம், இந்தியாவிலுள்ள பிறதேசிய இன மக்களில் சிலரும், குறிப்பாகத் தெலுங்கர்கள், மலையாளிகள் முதலிய தென் திராவிட இனத்தவரும், வங்காளிகள், பஞ்சாபியர்கள் முதலிய வட இந்திய இனத்தவர்களும் சிறுசிறு அளவில் சேர்ந்தே வாழுகிறார்கள். மலேசியாவிலும், சிங்கப்பூரிலும், கனடாவிலும், சில ஐரோப்பிய நாடுகளிலும், வேறு சில ஆப்பிரிக்க நாடுகளிலும் இந்த நிலைமைகளே இருப்பதைத் தமிழின வரலாற்றைப் பரவலாக அறிந்தவர்கள் உணர்ந்திருப்பார்கள். ஆனால் இந்திய இனத்தவர்களில் பலரும் எந்த நாட்டில் போய் வாழ்ந்தாலும், அவர்களுள் மிகுதியான எண்ணிக்கை உடையவர்கள் தமிழர்களே! எனினும் இப்பொழுதுள்ள இந்திய வடநாட்டுப் பார்ப்பனிய ஆட்சிச் சூழலில், வெளிநாடுகளில வாழும் தமிழர்கள் கணிசமான பெரும்பான்மையராக இருந்தாலும், அவர்கள் அனைவரையும் இந்தியர்கள் என்றே குறிப்பது வழக்கமாகி விட்டது

அண்மையில் பிசித் தீவில் படைத்துறை அதிரடிப் புரட்சி நடந்து, படைத்தலைவர் **ரபூகா** என்பவர் அந்நாட்டு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றித், தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப் பெற்ற முன்னாள் தலைமையமைச்சர் ***டிமோசி பவத்ரா*** என்பவரையும் அவரது அமைச்சரவையில் இருந்த அமைச்சர்கள் பிறரையும் சிறைப்படுத்தியிருக்கிறார். இதற்குக் காரணம் பவத்ரா சட்டமன்ற அவையில் இருந்த 52 உறுப்பினர்களில், 22 பேர் பிசித் தேசிய இனத்தவர்களாகவும் மற்றும் 22 பேர் பெரும்பான்மைத் தமிழர்களைக் கொண்ட இந்தியர்களாகவும், பிற 8 பேர் வேறு இனங்களைச் சேர்ந்த பொதுப் பிரிவினராகவும் இருந்தனர் என்பதே. அஃதாவது பிசித்தீவின் தேசிய இனத்தவர்களுக்கு முதலிடம் கிடைக்காமல் இருந்த நிலைமையால், அந் நாட்டின மக்கள் பெரிதும் நிறைவற்றிருந்தனர்.

எனவே, திடீர் அதிரடிப் புரட்சியால் ஆட்சியைக் கைப்பற்றிய படைத்தலைவர் ரபூகா முதன் முதலில் பிசித்தீவின்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

தமிழர்கள் சிந்திக்க வேண்டும்!

விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகள் ஆகியும் இந்தியத் துணைக் கண்டத்தை மீளாத வறுமை வளைத்துப் பிடித்து இருக்கிறது. இந்திய மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கினர் நாள்தோறும் இரவு உணவு இன்றிப் பட்டினியுடன் உறங்குகின்றனர் என்பது உலக ஒன்றியப் பேரவை தரும் புள்ளி விளத்தம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் எழுந்துள்ள சிக்கல்களுக்கு அண்மையில் ஒரு சிகரம் எழுந்துள்ளது. அசாம், பஞ்சாப், திரிபுரா, நாகாலாந்து, கூர்க்காலாந்து கோரிக்கை ஆகிய இவையெல்லாம் சிக்கல்களின் சிகரமாகவும், அதே நேரத்தில் ஆணி வேராகவும் அமைந்துள்ளன. இந்தியாவில் தலையாய சிக்கல் தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறையே. தேசிய நீரோட்டம் என்பதன் நடைமுறைப் பொருள், கட்சி எதுவாயினும் இந்தி பேசும் மாநிலங்களின் முதலீடுகளும், முதலாளிகளும் அவர்களோடு மூலமுதல் கூட்டு வைத்துள்ள பிற ஆற்றல்களுமே இந்தியாவை ஆளப் பிறந்தவை. இவர்களும் இவர்களின் மூலமுதல்களுமே இந்தியாவில் ஏனைய மாநிலங்களை அதிகாரம் செய்யப் பிறந்தவை. இவர்கள் உருவாக்கம் செய்யும் இயந்திரப் பொருள்களும், குறிப்பாக அன்றாட நுகர் பொருள்களுக்கும், பஞ்சாப், அசாம், வங்கம், இந்தி பேசாத தென் மாநிலங்கள் ஆகியவையெல்லாம் சந்தைகளே! (தவிர்க்க முடியாத நிலையில் இந்த மேல்சாதி இந்துக்கள் மார்வாரி மூலமுதலுடன் கூட்டு வைப்பர். அதன் மூலம் மராட்டியத்தின் தொழில் தலைநகரமான பம்பாயையும் வளைத்துப் பிடிப்பர். இதுதான் நடைமுறை உண்மையாக நிகழ்ந்து வருகிறது.

மேல்சாதி இந்துக்களின் உணர்வுகளைப் பாதுகாப்பது, சிக்கல் எழுகின்ற இடங்களில் இந்து—முசுலீம், இந்து—சீக்கிய மோதல்களை மறைமுகமாக உருவாக்குவது (எ-டு: அசாம், பஞ்சாப்) இந்தி மொழியையும் தேவநாகரி எழுத்தையும் பிற மாநிலங்களின் மீது திணிப்பது, பிற தேசிய மொழிகளின் வளர்ச்சிக்குப் போதிய தொகை ஒதுக்காமல் புறக்கணிப்பது, மாநிலங்களின் உரிமைகளை மறுப்பது, ஆற்று நீர் முதலிய இயற்கை வளங்களில் மாநிலங்களுக்கு இடையே மோதலை உருவாக்குவது, மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களைப் பறிப்பது (எ-டு: கல்வியை மாநிலங்களிடமிருந்து பறித்துப் பொதுப்பட்டியலில் சேர்த்தது) மேலே சொன்னவற்றை மக்களிடமிருந்து மறைப்பதற்கு வானொலியையும், தொலைக்காட்சியையும் பயன்படுத்துவது இவையெல்லாம் 1947 முதல் நடுவண் அரசால் திட்டமிட்டு நடத்தப் பெறும் செய்திகளாகும்.

ஒரு சில மாற்றங்களோடு நேரு முதல் அவர் பேரன் வரை அத்தனைத் தலைமை அமைச்சர்களும் (கட்சி வேறுபாடின்றி) இந்தக் கொள்கையில் தடம் புரளாமல் நின்றிருக்கின்றனர்.

இதை இன்னும் விரிவாகச் சிந்திப்போமே!

தமிழ்நாட்டில் அரசு பெறும் வணிக வரியில் 6½ விழுக்காடு வடநாட்டு மார்வாரிகளால் செலுத்தப் படுகிறது. வரி செலுத்தாத பிற துறைகளும் இவர்கள் வயம் உள்ளன. ஆண்டு ஒன்றுக்கு வடநாட்டு மார்வாரிகள் தமிழ்நாட்டில் இருந்து கொண்டுசெல்லும் வட்டிப்பணமே கோடிக்கணக்கிலாகும்.

தமிழ்நாடு மட்டுமன்று; இந்தி பேசாத எல்லா மாநிலங்களின் நிலைமையும் இதுதான். அது மட்டுமன்று; வெண்சுருட்டு, குளியல் வழலை, வெளுப்புச் சவர்க்காரம், துணி, முகவழி பொருள்கள், பற்பசைப் பொருள்கள், தேயிலை ஆகிய பொருள் உருவாக்கத் துறைகளில் இந்திய மக்கள் அனைவருக்குமான உருவாக்கம் 10, 15 வடநாட்டுத் தனியார்களிடமே இருக்கிறது. இந்தி பேசாத மாநிலங்களில் அந்தந்த மாநிலத்தவர் மூலமுதலுடன் எத்தனைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன என எண்ணிப் பாருங்கள். இவை மட்டுமா?

இந்தி பேசாத மாநிலங்களிலுள்ள தொழில் மூலமுதல்களில் கணிசமானது இந்த வடநாட்டு முதலாளிகளுடையதுதான். இந்தியாவின் தென் கோடிப் பகுதியில் இருக்கிற திருச்சி மாவட்டத்தில் டால்மியாவிற்கும், நெல்லை மாவட்டத்தில் கோத்ரெச்சுக்கும், கொல்லம் மாவட்டத்தில் டால்மியாவிற்கும், தொழிற்சாலைகள் உண்டு. தமிழ்நாட்டு முதலாளிகள் எங்கே! அவர்களது மூலமுதல் என்னவாயிற்று? இத்தோடு விட்டதா தொல்லை?

மிக அண்மைக் காலமாக அந்தந்த மாநிலத்து முதலாளிகள் தங்கள் மூலமுதலில் தங்கள் மாநிலத் தொழிலாளர்களைக் கொண்டு நிறுவி வளர்ந்துள்ள பெரும் தொழில்களைக்கூட இந்த வடநாட்டுத் திமிங்கிலங்கள் சுவடில்லாமல் விழுங்கி விடுகின்றன. இதற்குச் சரியான எடுத்துக் காட்டு சிவகாசி வட்டார அச்சுத் தொழில்! தமிழ்நாட்டு நாடார்கள் வளர்த்த இத் தொழிலைக் கடந்த இரண்டாண்டுகளில் வடநாட்டு முதலாளிகள் வளைத்துக் கொண்டு விட்டனர், எத்தனைத் தமிழருக்கு இது தெரியும்?

இயந்திரப்பொருள் உருவாக்கத்தில்தான் இந்த நிலைமை என்பதில்லை. இந்தி பேசாத மாநிலங்க

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

மெரீனு முதல் மருதையாறு பாலம் வரை

-- இரணியன்.

எந்த ஒரு நாட்டின் விடுதலைக்காகப் போராடும் இயக்கமும், தன் மக்களுக்குக் கேடு செய்ய நினைத்ததாக வரலாறு இல்லை. தன்னையே காவு கொடுக்கும் மறவர் பலரை வரலாறு கண்டிருக்கிறது. ஆனால், தன் மக்களை அழிக்க முற்பட்ட போராளி எவனையும் வரலாறு கண்டதில்லை.

ஈழ மண் விடுதலைக்கும் மக்கள் விடுதலைக்கும் துணை நிற்கும் தமிழகத்து மக்களுக்கோ, தமிழ் நாட்டு உடைமைகளுக்கோ கேடுசெய்ய, ஈழப் போராளி எவனும் எக்காலத்தும் எண்ணியதில்லை! எண்ணவும் மாட்டான். அவன் எந்த இயக்கத்தவனாக இருப்பினும் சரி! எந்த வகையினனாக இருப்பினும் சரியே.

தமிழ்நாட்டு உடைமைகளுக்குக் கேடு செய்வதால் அவனுக்கு ஏற்படப்போகும் நன்மை ஏதுமில்லை! மாறாகக் கேடுகளே உண்டு! இதை உணராத போராளி ஒருவனும் இல்லை.

ஆனால், அரியலூர் மருதையாற்றுப் பாலத்திற்கருகில் துண்டறிக்கைகளும் சுவரொட்டிகளும் காணப் பட்டனவாம். அதில், "தனி ஈழத்திற்கு இந்திய அரசே இசைவு வழங்கு! ஈழப் போருக்கு உதவி செய்; நமீபிய, பாலத்தீனிய விடுதலை இயக்கங்களுக்கு இசைவு வழங்கியதுபோல் ஈழ விடுதலை இயக்கத்திற்கும் இசைவு வழங்கு" என்று சுவரொட்டிகள் சில காணப் பட்டனவாம். அத்துடன், "தமிழக விடுதலைப் படை" என்றும் அறிக்கை ஒட்டியவர்கள் தம்மை அவையாளப் படுத்தியிருந்தனராம்.

இதிலுள்ள முரண்பாடுகள் கொஞ்சம் சிந்திப்பவர்களுக்கும் தெளிவாக விளங்கும்!

"தமிழக விடுதலைப் படை" என்னும் இயக்கம் ஒன்றிருந்து, அவர்களால் இச் செயல் செய்யப் பட்டிருந்தால், "தமிழகம் எவ்வாறு ஒடுக்கப் படுகிறது. ஒடுக்கு முறையை எதற்கு, ஏன் தில்லி கைவிட வேண்டும், தவறினால் என்ன நடக்கும்" என்கிற பான்மையில்தான் கருத்து வெளியிட்டிருப்பார்களே தவிர, ஈழச் சிக்கலை முதன்மைப் படுத்தியிருக்க மாட்டார்கள். ஈழச் சிக்கலை முதன்மைப் படுத்துபவர்களாக இருந்தால், "தமிழக விடுதலைப் படை" எனப் பெயர் வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

இதிலிருந்தே, இச் செயல் ஒரு வஞ்சகக் கூட்டத்தின் கைவரிசையே என்பதும் சுவரொட்டிகள் துண்டறிக்கைகள் எல்லாம் அவர்கள் நடத்திய நாடகமே என்பதும் தெளிவாகப் புலனாகின்றன.

என்றால், இக் கைவரிசையைச் செய்த வஞ்சகர்கள் யார்?

தமிழகத்தில் அவ்வப்போது முளைவிடும் உரிமை எண்ணங்களைக் கிள்ளி எறியவும், தமிழினத்திற்கே விடிவைத் தரவுள்ள ஈழவிடுதலைப் போரைக் கொச்சைப் படுத்திச் சிதைக்கவும் எவர்கள் திட்டமிடுகின்றனரோ, அவர்களே இச் செயலையும் செய்திருக்க வேண்டும்.

"...'தமிழகம்', 'விடுதலை', 'படை', 'ஈழம்', 'இந்தியா ஏற்பு வழங்கல்' போன்ற சொற்கள் அனைத்தையும் தமிழகத்து மக்கள் வெறுக்க வேண்டும்; இச் சொற்களைக் கூறுவோர் அனைவரையும் நஞ்சைக் கண்டதுபோல் தமிழ்மக்கள் நோக்க வேண்டும்! அதற்கான வழிமுறை, இந்தப் பெயர்களின் முகவரியுடனேயே தமிழ் மக்களுக்குத் தீங்குகளைச் செய்வது..."—இதுவே இவ் வஞ்சகக் கும்பலின் திட்டமாகும். தமிழ்நாட்டு மக்கள் ஈழப் போராளிகளை வெறுத்தால், ஈழப் போரின் ஊக்கம் குன்றும் என்பது அவர்களின் நம்பிக்கை.

இவ் வஞ்சனையின்மூலம், மக்கள் நேயத்தைக் கொன்று, கொடுமையான முறையில் பற்பல உயிர்களைப் பறித்துக் கொண்டுவிட்டது இக் கொலைக் கும்பல்! இதே பான்மையில், இக் கும்பல் தன் நடவடிக்கைகளை மேலும் தொடரலாம்!

இத்தகு செயல்களுக்காக ஏராளமான பணத்தை வாரி இறைக்கிறது சிங்களக் காடையர் அரசு! செயவர்த்தனேக்களும், பண்டார நாயகப் பரம்பரையும் இதன் பொருட்டு ஒரே மேடையில் ஏறியுள்ளார்கள்! இசரேலும், சி. ஐ. ஏ.வும், பிரிட்டானியர் கூலிப்படையும் இதற்கான செயல் முறைகளை வடிவமைத்துத் தருகின்றன! விடுதலையை நாடும் பல்வேறு நாடுகளிலும் விடுதலைப் போரைச் சிதற அடித்து வெற்றிகண்ட பட்டறிவால், ஈழப போரைச் சிதற அடிக்கவும் இவர்கள் வழிவகை கூறுகிறார்கள்! சிங்களக் காடையருக்குத் தமிழகத்தில்கேமாளி வேடம் போடும் ஓநாய்களும், உயர் அதிகாரிகளாய்ப் பணிபுரியும் வீடணர்களும், காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர்களும், பொறுக்கி எடுத்த குண்டர்களும் எளிதில் கிடைக்கிறார்கள்.

விளைவு?

தமிழகத்தில் குண்டுகள் வெடிக்கின்றன! வண்டிகள் கவிழ்கின்றன! மக்கள் மாய்கின்றனர்! அச்சமும் அவலமும் பெருகுகின்றன! அழிம்புகள் தொடர்கின்றன! யாரையும் யாரும் நம்ப இயலாத நிலைபரவுகின்றது! (தொடர்ச்சி 8- ஆம் பக்கம்)

(முன்னிதழ்த் தொடர்ச்சி) தொடர்—2

இறியூனியன் தீவில் தமிழர்கள்.

ஆங்கிலத்தில் : கே. சச்சிதானந்தன், சீசெல்சு.
தமிழில் : 'ஆலன்'

இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்—அதாவது அறுபதுகளில்—இறியூனியன் தமிழர்கள் தம் சமூகப் பண்பாட்டுச் சமய உறுதிப்பாடுகளைத் தளரவிடாமல் தங்கவைத்துக் கொள்வதில் முனைந்து நின்றனர். பிரெஞ்சுக்காரரின் முழு-வயப்படுத்தலுக்கு ஆட்படும் முறைக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பினர். தமிழர்களிடையே தலைவர்கள் தோன்றினர்; அவர்கள், தமிழர்கள் தம் மதத்தைக் கடைப்பிடிக்கும் வாய்ப்பேற்படுத்தவும் பொதுவழிபாட்டு மன்றங்கள் கட்டவும் தமிழ் நாட்டிலிருந்து பூசகர்களைக் கொண்டுவரவும் பிரெஞ்சு அரசுடனும் கத்தோலிக்க மத நிறுவனத்துடனும் அமைதியான முறையில் உடன்படிக்கை செய்தனர்.

'செயின்ட் பியரி'யில் பத்துக் குறுக்கம் இடப் பரப்பில் ஒரு பெருமாள் கோவில் அமைக்கப் பெற்-றுள்ளது. கோயில் கோபுரத்தின் உயரம் 50 அடி. அக் கோயிலில் காஞ்சிபுரத்துப் பிராமணப் பூசாரிக் குடும்பம் ஒன்று தங்கியுள்ளது; சென்னை கலாசேத்திரத்தில் பயின்ற ஒருவரால் பரத நாட்டியம் கற்-பிக்கப் பெறுகிறது. திரு வடிவேல் வையாபுரி முதலிடம் பெற்றுள்ள அறங்காவலர் குழு அக் கோயிலை மேலாண்மை செய்கிறது. அவர் இறி-யூனியன் தமிழ்க்கோயில்கள் மன்றத் தலைவராவார். அம்மன்றத் துணைத்தலைவர் திரு. சண்முகம் (பிள்ளை), தலைநகரான 'செயிண்ட் டேனிசு'வில் உள்ள காளிகோயிலை முன்னின்று கண்காணிக்கிறார். அக் கோயிலில் கும்பகோணத்துப் பூசகர் ஒருவர் உள்ளார்; மதுரையிலிருந்து வரவழைக்கப் பட்ட சிற்பிகள் (ஸ்தபதிகள்) ஐவரைக் கொண்டு தமிழர் கோயிற்கலை முறைப்படி அக்கோயில் திருப்-பணி நடைபெறுகிறது. 'செயிண்ட் ஆண்ட்ரூ'வில் தமிழ்நாட்டிலிருந்து கொண்டு சென்ற தேர் உள்ள சிவன் கோவில் உள்ளது; தமிழ்நாட்டில் தி மு. க. அரசேற்பட்டபின் பயிற்சியளிக்கப்பட்ட பிராமணரல்லாத பூசகர்களில் ஒருவர் அக் கோயிலில் உள்ளார். தாம் வாழும் பகுதியில் உள்ள இளைஞர்களுடன் மிக நெருக்கமாகப் பழகுகிறார் அவர். மேலும் சில கோவில்களிலும் தமிழ்நாட்டுப் பூசகர்கள் உள்ளனர். எப்படியாயினும் ஒவ்வொரு வீட்டிலும் தமிழ்க் கோவில்கள் இடம் பெற்-றுள்ளன.

இறியூனியனில் உள்ள 24 நகரவைகளில் இரண்டின் தலைவர்கள் தமிழராவர். (செயிண்ட் மேரியில் பர். சாமிநாதன், செயிண்ட் ஆண்ட்ரூவில் திரு. வீரப்புள்ளே.) பிரெஞ்சு ஆட்சிப் பேரவைக் குழுவில் (French Senate) இறியூனியனிலிருந்து இடம்பெறும் மூவரில் திரு. இராமசாமி, திரு. வீரப்புள்ளே இருவரும் உள்ளனர். பிரெஞ்சு ஆட்சிமனை (French House)யில் இடம்பெறும் மூவரில் தமிழர் ஒருவருமிலர். இறியூனியனில் மார்க்சீயப் பொதுவுடைமையில் பெரிதும் ஈடுபாடுள்ளவர் திரு. சின்னமலை; பிரான்சு, மொரிசியசு, சீசெல்சு, மடகாசுகர் மற்றும் கீழை ஆப்பிரிக்கப் பொதுவுடைமையாளரிடையே சிறப்புப் பெற்றவராகவும், கரந்தடிப் படைத் தலைவராகவும் விளங்கியவர் அவர். திரு. மித்தரெண்டு என்பவர் ஆட்சித் தலைவரானபின் பல இலவய வானொலி நிலையங்கள் செயல்படத் தொடங்கின. தேவந்தே, தாசு மகால், வெள்ளி, கலைவாணி மற்றும் பாக் பாக் வானொலி நிலையங்கள் அன்றாடம் தமிழர்-களுக்கு மட்டுமே நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன.

பிரெஞ்சு அரசியலின் பெருநீரோட்டத்திலும் அரசியல் கட்சிகளிலும் பெரும்பாலான தமிழர் தலைவர்கள் உள்ளனர். எனினும் இறியூனியன் தீவினர்க்கென்று ஒரு தனிக் கட்சியினை இசுடீமேரீ நகரத் தலைவர் மர்-கிச்செனின் அமைத்திருக்கின்றார். நடுவண் வளர்ச்சிக் கட்சி (Center Progressive Party)யின் இடதுசாரிக் கட்சியான அது பெரிதும் தமிழரின் ஆதரவுடன் நடைபெறுகின்றது. நகரத் தலைவர் என்ற முறையில் மர்-கிச்செனின் தம் நகராட்சியில் தமிழ்ப் புத்தாண்டு விடுமுறை நாளை அறிவித்ததால் பிரெஞ்சு அதி-கார மட்டத்தினரால் தொல்லைகள் விளைந்தன. இது போலும் தொடர்ந்த நடவடிக்கைகளால் தளைப்படுத்தப்பட்டுச் சிறையிலிடப் பட்டார் அவர். பெரும் எதிர்ப்புகளாலும் பொதுமக்கள் அணி திரண்டதாலும் மூன்று நாள்களில் அவர் விடுதலை செய்யப்பெற்றார். இறியூனியன் வரலாற்றில் சிறையிலிடப் பெற்ற ஒரே நகரவைத் தலைவர் அவரே. செல்வக் குடும்பத்தைச் சார்ந்த மருத்துவரான அவர், பேர்பெற்ற வழக்கறிஞரும் மாந்த உரிமைகள் பற்றிய வழக்குகளில் ஈடுபாட்டாளருமான திரு. சாக்குவிசு வெர்சீசு என்பாரைத் துணையாகக் கொண்டுள்ளார். 'Amnesty International' இதழ் இத்தகு போராட்டத்தை மிகவும் பாராட்டி எழுதியுள்ளது.

பிரெஞ்சு நாட்டுடன் முழுவயப்படும் முறையினைத் தடுக்கும் பொருட்டு அங்குள்ள தமிழர்கள் முதலில் தமிழ்நாட்டுத் தொடர்புள்ள பண்பாட்டு நிறுவனங்களை அமைக்க முயல்கின்றனர். மேலும் பிரெஞ்சு அதிகாரமட்டத்தினின்று எதிர்பார்ப்பனவும் சில உள. அவை:

1. மொழி, நாடகம், இசை, கோயிற்கலை, சிலைவடிப்பு, ஓகம், சமையல், அணிகலன் செய்தல், மாதிரி உருவம் செய்தல், தையல் முதலிய

Scanned with CamScanner

(முன் பக்கத் தொடர்ச்சி)

வற்றைக் கற்பிக்கத் தமிழ் நாட்டிலிருந்து வரும் ஆசிரியர்களும் அறிவிப்பாளர்களும் சுற்றிப் பார்க்கவும் தங்கியிருக்கவுமான கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல்; இறியூனியன் தமிழர்கள் மேற்கண்டவற்றில் புலமை பெறுவதற்கேற்றபடி போதிய எண்ணிக்கையிலும் போதிய கால எல்லை' வரையிலும் அவர்கள் தங்க வாய்ப்பளித்தல்;

2. தமிழில் எடுக்கப்பெறும் திரைப்படங்கள், ஆவணப்படங்கள் மற்றும் காட்சியங்களுக்கு (Video aids) பிரெஞ்சு மொழித் துணைத் தலைப்பிடுதல்;

3. சமயப் பணியாற்றவும் பயிற்சி தரவும் தமிழ்நாட்டிலிருந்து வரும், பயிற்சி பெற்ற பூசகர்களும் சமய ஆசிரியர்களும் வந்து தங்குவதற்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல்;

4. இறியூனில் இந்தியப் பேராளர் அலுவலகம் ஒன்றைத் திறக்க ஒப்புதல்—என்பனவாகும்.

பிரெஞ்சு அரசிடமிருந்து இறியூனியன் தீவு அளவிலான கீழ்க்காணும் வசதிகளையும் தமிழர்கள் எதிர்நோக்குகின்றனர்.

1. இறந்த உடலங்களை எரியூட்ட வேண்டுபவர்க்கு ஏற்ற வசதி செய்து தர வேண்டும்.

2. இறியூனியன் வானொலியும் தொலைக் காட்சியும் தற்போது நிகழ்வதுபோல் தமிழ்ப் பண்பாட்டுக்கு எதிராக ஒரு சாய்வாக இயங்குவதை நிறுத்தி, எல்லாப் பண்பாடுகளையும் ஒப்ப வைத்து நிகழ்ச்சிகளை அலைபரப்ப (Broadcast) வேண்டும்.

3. பொதுப் பணியமர்த்தங்களுக்குச் சமன்மைக் கோட்பாடும் தகுதிச் சால்புமே அளவிடு கருவியாக அறிவிக்கப் பெற வேண்டும்.

4. பள்ளிகள், மருத்துவமனைகள் பாளையங்கள் (படைத்தளங்கள்), சிறைகள், விடுமுறை மகிழ்வகங்கள் (holiday resorts) முதலிய பொது நிறுவனங்களில் பணியாற்றும் தமிழர்க்கு விடுப்பு வழங்குவதில் தமிழர் விழாக்களும் நோன்புகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

5. பள்ளிகளில் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்மொழி கட்டாயப் பாடமாக ஆக்கப் பெற வேண்டும்.

6. பொது மக்களுக்குப் பணிபுரியும் வானொலி, தொலைக்காட்சி, இறியூனியன் நடுவண் பண்பாட்டுச் செயலகம் போன்ற பண்பாட்டு நிறுவனங்கள் இவற்றின் அன்றாட நடைமுறையில் தமிழர் அமைப்புகளும் தகையாளர்களும் இணைந்து மேலாண்மை புரிய வேண்டும். (முற்றும்)

உழைப்பும், உருவாக்கமும் உழைப்பார்க்கே பயன்பட கூலி உயர்வை உதறித் தள்ளுவோம்!

'கூலி உயர்வு வேண்டும். வெகுமதி (போனசு) உயர்வு வேண்டும் என்று, தேர்தல் வணிகம் செய்கிற கட்சிகள் கத்திக் கொண்டே இருக்கின்றன!'

சிறிதளவு கூலி உயர்வும், சிறிதளவு வெகுமதி (போனசு) உயர்வும் வாங்கிக் கொடுத்து விட்டதோடு, தம் பைகளை நிறைத்துக் கொள்கின்றன—அவை!

இதனால் ஒருபுறம் தொழிலாளர்களுக்குக் கூலியை அதிகப்படுத்திக் கொடுத்த முதலாளிகள், மறுபுறம் பொருள்களின் விலையைக் கூட்டி விற்பனை செய்கிறார்கள்.

—இப்படியாக விலைவாசி கைக்கெட்டாமல் உயர்ந்துவிட்டது.

—கடைசியில் உழைத்தவனுக்கே பொருள் கிடைக்காத ஏமாற்றமும் உழுபவனுக்கே உணவு கிடைக்காத ஏமாற்றமும்தாம் மிச்சம்!

இதன் விடிவுதான் என்ன?

தொழிலாளர்களே! சிந்தியுங்கள்!!

பணக்காரன், அரசியல்காரன், முதலாளி—என்று இல்லாமல் எல்லாரும் உழைத்து, அவரவர் தேவைக்கேற்பப் பெற்று வாழும் காலமே,—

நாம் நமக்காக வாழும் காலம் ஆகும்!

—மற்றது இன்னொருவன் சுரண்டிக் கொழுக்க, நாம் உழைத்துக் கொட்டும் அடிமை வாழ்வே ஆகும்!

உண்மையான விடுதலை வாழ்க்கையை நோக்கி, இந்தத் தமிழக மக்களின் உழைப்பும், விளைச்சலும் இந்தத் தமிழக மக்களுக்காகப் பயன்பட வைக்கும் பெரும் புரட்சி நாளே நம் விடுதலை நாள்!

தொழிலாளர்களே நம் உண்மையான விடுதலைக்கு, நம் உண்மையான விடுதலை வாழ்விற்கு, நாம் ஓரணியாக நின்று புரட்சி செய்வோம்!

நம் தமிழக மக்கள் உழைப்பையும், உருவாக்கத்தையும் நம் தமிழ்நாட்டு மக்களுக்காக ஆக்குவோம்! புரட்சி ஓங்குக! தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக!

—தமிழ்நாடு தொழிலாளர் பேரவை.

Scanned with CamScanner

நாட்டு நடப்புகள்;

புரட்சி பற்றி!

'புரட்சி' என்ற சொல்லுக்குத் தமிழ்நாட்டில் பாவேந்தர் பாடல்கள் வலுவேற்றின. அதனை இன்று கேட்டதும் வரக்கூடாத நினைவுகளே வருகின்றன.. 'இப்படித் திரையிலும் மறைவிலும்' நடந்த மாற்றத்தால் 'புரட்சி' என்றதும் குமட்டல் வரும்போல் தெரிகிறது. அந்த அளவுக்குச் சொல்லின் பொருள் நடைமுறை சிதைந்து விட்டது.

ஆயினும், தமிழ்நாட்டு உழவர்குடியின் அடிப்படை மக்கள் தம் குழந்தைகளுக்குப் 'புரட்சி' என்று வைத்திருப்பதைக் காண்கிறோம். அந்த அளவு மக்கள் 'புரட்சி'யை நம்பி எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால், அவர்களின் வாயில் மண் விழுந்தது என்றால் மிகையாதல் இல்லை!

உழவர் குடி மக்கள் தங்கள் வாழ்க்கையோடு கலந்து விடுகிறார்கள். அவர்கள் 'இனம்' பிரித்துக் காண்பதற்கும் நேரமின்றி உழைப்பவர்கள். நெல்லை—மணி வகையை — அவர்களால் இனம் கண்டறிய முடியும். அரசியல் போலிமையை அவர்கள் அறிய மாட்டார்கள். தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட 'ஐ. ஆர்.எட்டு' என்ற நெல்லின் பெயரைக் கூடத் தாம் பெற்ற குழந்தைகளுக்குப் பெயராகச் சூட்டி மகிழ்பவர்கள். அவர்கள் 'பதரை உண்டு' பெருமையடைபவர்கள்!

உழைப்பின் மேனி கண்டு மகிழும் அவர்கள் அந்த மேனி தம் கைக்கு வந்தும் வயிற்றுக்குக் கிடைப்பதில்லை என்றபோதும் கவலைப்படாதவர்கள் உழவர் குடிமக்கள்! எனவேதான், பண்பாட்டின் அடிப்படையிலும் கருத்தடிமையாக்கப்பட்டுக் கிடக்கின்றார்கள்.

அவர்களின் விடுதலைக்காகப் போர்க்குரல் எழுப்பும் தோழர் 'இன்குலாப்', வாழ்க! அவர் பெயர் 'புரட்சி' என்றிருந்தால், தமிழ்ச் சொல்லுக்கொரு வேகம் கூடியிருக்கும். இன்று...'புரட்சி' என்றாலே 'போலிமை' நினைவு வருகின்றதே!

அடிப்படை மக்களைச் சென்றடையும்படி கருத்துக்களை உரக்க எழுப்புகின்றவர்கள், சொற்களைத் தமிழாகக் கொள்க! 'இன்குலாப்' என்ற பெயர் 'புரட்சி' என்றிருந்தால் எவ்வளவு தேசிய ஆழம் உடைய உணர்ச்சி பெற்றிருக்கும்? எண்ணிப் பார்க்கிறேன்!

மண்ணின் மணம் கமழும் சொற்களால் உழவர் உழைப்பாளர்களை விழிப்பூட்டிவரும் பாவலர்கள் படை பெருக வேண்டும்!

அறிஞர் நாகராசன் கூறியபடி 'ஒரு வரையறுக்கப்பட்ட' எல்லையில் 'புரட்சி' அறுவடை செய்ய நாம் முனையவில்லை. அரங்கின்றி ஆடிய ஆட்டமாக 'உலகியம்' பேசும் பொதுவுடைமையாளரின் வேலை, வெட்டிவேலையாகிப் போனதோ? இந்தியத் துணைக் கண்டத்தில் 'பொதுமை' விரைந்துயரவும் பரவவும் ஒரு வரையறுக்கப்பட்ட தேசிய இன எல்லைக்குள் செயல்படுதல் வேண்டும். அது நிகழ்க!

'பசுமை', 'வெண்மை', நீலப்புரட்சி எல்லாம் நம்முடைய புரட்சிப் பார்வையைச் சிதறப் பண்ணி விட்டன!

'தேசியம்' பற்றிய கருத்தோட்டம் வளர்க. அதேவேளை, 'புரட்சி', போராட்டம் யாவும் எதற்காக என்ற வினா வேகம் பெறட்டும்—விரைவு செய்வோம்—வெற்றி காண்போம்!

போராட்டத்தில் புதிய மாந்தன் பிறக்க—ஒரு புரட்சிக் கடமை உருவாகட்டும்!

-- பறம்பை அறிவன்.

(5-ஆம் பக்க தொடர்ச்சி)

ஆட்டைக் கடித்த ஓநாய், "கடித்தவன் யார்" என்று உசாவல் நடத்துகின்றது! ஊருக்குத் தீ வைத்தவன் தீயணைப்புக்குத் தலைமை தாங்குகிறான்!

மக்களுக்கு உண்மை ஊழியம் புரிய வந்தவன் சிறைநடுவே சிதை படுகிறான்!

மெரினாக் கடற்கரை முதல், மருதையாற்றுப் பாலம் வரையிலான தொடர்கதையின் அடித்தளம் இதுதான்!

தமிழ்மக்கள் உண்மையை விளங்கிக் கொள்ளவும் பொய்யர்களை அப்புறப்படுத்தவும் முன்வராத வரை ஒரு கட்டபொம்மனுக்கு இரண்டு எட்டப்பர்கள் தோன்றவே செய்வார்கள். (முற்றும்)

ஏழைக்குக் கூடுதல் வரி!

50 உருபாய்க்குப் பணவிடை அனுப்பினால் உரு. 10/-க்கு 30-காசு மேனி 1-50 கட்டணம்.
ஆனால் உரு. 60/-க்குப் பணவிடை அனுப்பினால் உரு. 10/-க்கு 40/- காசு மேனி 2-40 கட்டணமாம்.
உரு. 50/-இற்கு மேல் பணம் அனுப்புவோர் பணக்காரர்களாம், அதற்குள் பணம் அனுப்புவோர் ஏழைகளாம்,
எப்படி?
பணக்காரர்களுக்கு உரு. 10/-இற்கு 40-காசு மேனி கட்டணமாம்.
ஆமாம் எங்களுக்கு ஓர் ஐயம்!
இந்தியாவில் எந்தப் பணக்காரன் பணவிடையில் பணம் அனுப்புகிறான்?
டாட்டாவா...? பிர்லாவா...? ராசீவா...? எம்.சி.ஆரா...?
யாரை ஏய்க்கிறார்கள் இவர்கள்?

(4ஆம் பக்க தொடர்ச்சி)

ளின் வேளாண்மைகூட இவர்களாலேயே சுரண்டப்படுகிறது. டாட்டா மண்வெட்டி, ஷா வாலக்ஸ் பூச்சி மருந்துகள், உரங்கள், கிர்லோஸ்கர் உழுவுந்துகள்(டிராக்டர்கள்) என்று இந்தக் கடல் சிலந்திகளின் வாய்களுக்குள் படாத செய்திகளே இல்லை.

இந்திய வேளாண்மைப் பெருக்கத்திற்கு பஞ்சாபில் கோதுமை காய்கறிகள் தேயிலை, ஆந்திராவின் புகையிலை, மாம்பழம், கரும்பு, கொடிமுந்திரி, தமிழ்நாட்டு அரிசி, கரும்பு, கேரளத்தின் மணப் பொருள்கள், தேயிலை, கர்நாடகத்தின் குளம்பி, தேயிலை—ஆகியவை முகாமையான பொருள்களாகும். **இந்த மாநிலங்கள் தேசிய உருவாக்கத்திற்குக் கொடுத்தது எவ்வளவு, கொண்டது எவ்வளவு — என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் தேசிய நீரோட்டம் எப்படிப் பட்டது என்று தெரியும்!**

கர்நாடகத்தின் சுரங்க மாழை வளங்கள், அசாமின் எண்ணெய் வளம், தமிழ்நாட்டின் நிலக்கரி ஆகியவை அந்தந்த மாநிலங்களுக்கு உழைப்பும் பிழைப்பும் தந்ததைவிட அவையெல்லாம் ஒருமைப்பாடு என்ற பெயரிலே நடுவண் அரசு வடநாட்டு முதலாளிகளுக்கு வாரி வழங்கிய பரிசங்கள் என்பதைப் பொருளியல் புள்ளி விளக்கங்களால் அறியலாம்.

இந்த நிலைமை இப்படியே இருந்தால் தேசிய ஒருமைப்பாடு வலுவடையும்; தேசிய நீரோட்டம், வற்றாமல் ஓடும்; இல்லாவிட்டால் பிறநாட்டு ஆற்றல்கள் இந்தியாவை விழுங்கிவிடும். இதை எதிர்த்துக் கேட்பவன் தேசப் பகைவன்! இந்தப் பூச்சாண்டித்தனத்தைப் பேராயம், சனதா, பாரதீய சனதா, லோக்தளம் ஆகிய தேசியக் கட்சிகள் எல்லாமே சேர்ந்து கொண்டு காட்டுகின்றன, என்பதுதான் கவனிக்கப்படவேண்டிய செய்தியாகும்.

ஒருமைப்பாடு என்ற பெயரிலே மாநிலங்களை அடக்குவதும் ஒடுக்குவதும்தான் வலுவான நடுவண் அரசு என்ற முழக்கத்தில் ஒளிந்து இருக்கின்ற கவட நாடகம்.

பொதுக் கல்வியோ, தொழிற்கல்வியோ படித்த தென்னாட்டு இளைஞர் எல்லோரும் வேலை தேடி அயல் நாடு செல்வது போலவே கடந்த 40 ஆண்டுகளாக வடநாட்டிற்குப் பயணமாகின்றனர். புதிய வேலை வாய்ப்புகள் இந்தி பேசாத மாநிலங்களில் இல்லை. இந்தி பேசும் மாநிலங்களில் தாம் உருவாகின்றன. இந்த அவலநிலை எத்தனை நாள்களுக்கு நீடிக்கும்?

வெள்ளைக்கான் நம்மை ஆங்கிலம் படிக்கச் சொன்னது ஆக்சுபோர்டிலும், அயர்லாந்திலும் நமக்கு வேலை வாங்கித் தரும் நோக்கத்தாலா? இவர்களுடைய புதிய கல்விக் கொள்கையும் இந்தித் திணிப்பும் அதே நோக்கத்தில்தான்.

நண்பர்களே! இந்த நிலைமையை மாற்றவும், மறுக்கவும் நாம் சிந்திக்க வேண்டாமா?

மறவர்கோ.
தலைவர், தமிழர்பேரவை பறம்புக்குடி.

எனக்குப் பிடித்தது 'தமிழ் நிலம்'

--பாவேந்தர் பாரதிதாசன்--

1950-இல் பொங்கல் விழாவிற்காக வேலூர் வந்திருந்த பாவேந்தரைச் சுற்றி அறிஞர் பெருமக்கள் அமர்ந்து கூட்டம் தொடங்குமுன் பேசிக் கொண்டிருந்தனர்.

பேச்சு வாக்கில் சென்னையிலிருந்து வந்திருந்த மயிலை சிவ. முத்து கடல் சார்ந்த நெய்தல் நிலம் தான் தமக்குப் பிடித்தது என்று கூறினார்.

தஞ்சையிலிருந்து வந்திருந்த நீ. கந்தசாமி தமக்கு மருதநிலம்தான் பிடிக்கும்என்றார்.

சேலத்திலிருந்து வந்திருந்த பாவாணர் தமக்குக் குறிஞ்சி நிலம்தான் விருப்பமான இடம் என்றார்.

அறிஞர்களின் கருத்தை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பாவேந்தரைப் பார்த்துத் 'தங்கட்கு எந்த நிலம் பிடிக்கும்?' என்று திருக்குறளார் கேட்டார்.

எனக்கு மிகவும் பிடித்த நிலம் '**தமிழ் நிலம்**' அதுதான் நாம் அனைவரும் வாழும் நிலம் என்றதும் பாவேந்தரின் விடையிலிருந்த பெருமிதம் கண்டு அறிஞர்கள் மகிழ்ந்தார்கள்."

த. கோவேந்தன் எழுதிய 'பாவேந்தர்' நூலிலிருந்து. நன்றி—'தாய்'

ஓர் அறிவிப்பு!

'**தமிழ்நிலம்**' புதிய வடிவில் கிழமைதோறும் வெளிவரவும் எல்லா வகையிலும் மேன்மேலும் இதன் பொலிவும் வலிவும் வளரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. நம் தமிழின மீட்புக்கு இதுவே சிறந்ததொரு வாளாகவும் கேடயமாகவும் திகழ்வதாகும். அனைத்து நிலைகளிலும் நம் அன்பர்கள் பெரிதும் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

அன்பர்கள் ஆங்காங்கு நடைபெறும் இயக்கச் செய்திகளையும், தமிழின விழிப்புத் தொடர்பான செய்திகளையும், இன மீட்புக் கட்டுரைகளையும் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

Scanned with CamScanner

நஞ்சூட்டிக் கொல்லும், 'புதிய' கொள்கைகள்!

இன்ன இன்ன துறை என்று வரையறை செய்ய முடியாத வகையில் அனைத்துத் துறைகளையும் அரசும், முதலாளியமும் சேர்ந்து கொண்டு சுரண்டுவதும், சுரண்ட வழியமைத்துத் தருவதும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது.

'ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து இறுதியில் மாந்தனையே கடித்ததைப் போன்று, இந்திய ஒருமைப் பாட்டைக் காக்கப் போவதாகக் கூறிக் கொண்டு, எவரெவரை இந்திய மக்களாக ஏற்றுக் கொண்டிருக்கிறதோ அவரவர்களையெல்லாம் கொன்று குவித்துக் கொண்டும், அவர்களிடமிருந்தெல்லாம் சுரண்டிக் கொழுத்துக் கொண்டும் இருக்கிறது, இந்த இந்திய அரசு.

எந்த எந்தப் புதிய வகைகளில் எல்லாம் மக்களைச் சுரண்ட, மக்கள் வாழ்க்கைக்கு நஞ்சூட்ட இயலுமோ, அந்த அந்த வகைகளில் எல்லாம் தவறாமல் செய்து கொண்டிருக்கிறது, இந்த முதலாளிய நலனுக்கான அரசு!

'புதிய'—என்ற சொல்லைக் கேட்கும்பொழுதே, நம் நெஞ்சாங்குலை அதிர்வாகிறபடி, அடுத்து என்ன செய்து தொலைக்கப் போகிறதோ என எண்ணிப் பார்க்கும்படி செய்துவிட்டது, இப் பார்ப்பனிய அரசு!

புதிய பொருளியல் கொள்கை என்றும், **புதிய கல்விக் கொள்கை** என்றும், **புதிய துணிக் கொள்கை** என்றும், **புதிய தொழிற் கொள்கை** என்றும், **புதிய மருந்துக் கொள்கை** என்றும்—இம் மக்களின் வாழ்க்கையில் மண் அள்ளிப் போட்டு, வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளிகளின் கைப் பொம்மையாக ஆடிக் களித்துக் கொண்டுள்ளது, இந்த இராசீவ் அரசு!

நம் பொருளியல் முறையில் எஞ்சியிருந்த சில முற்போக்கான திட்டங்களையும் அண்மையில் அறிவிக்கப்பட்ட புதிய பொருளியல் கொள்கை அடித்துச் சென்றுவிட்டது. அதுமட்டுமல்லாமல் வெளிநாட்டுப் 'பகற் கொள்ளைக்காரர்கள்' நமது பொருளியலுக்குள் ஊடுருவக் கதவை அகலத் திறந்தும் விட்டுள்ளது. கோடிக் கணக்கானோரை வேலையின்றி அலையவிட்ட அந்தப் **புதிய பொருளியல் கொள்கை** ஒரு சிலரின் கையில் கொடுமையான ஊதியம் மலைபோல் குவியவும் வழி வகுத்துள்ளது.

கோடிக் கணக்கான மக்களுக்குப் படிப்பு அறிவே கிடைக்காமல் செய்ய வழிவகுத்தது **புதிய கல்விக் கொள்கையின்** திறமையே! மேலும்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி அமைப்பியல் சட்டத்தை மாற்றி, அந் நாட்டு ஆட்சி மன்ற அவையில் பிசித் தேசிய இனத்தவர்களுக்கு 40 இடங்களையும், பெரும்பான்மைத் தமிழர்களைக் கொண்ட இந்திய இனத்தவர்களுக்கு 10 இடங்களையும், மற்ற அயலவர்களுக்கு 2 இடங்களைப் பொதுவாகவும் ஒதுக்கிக் கொண்டார். இதனால், பெரும்பாலும் வாணிகர்களாக இருந்து, அந் நாட்டின் பெரும்பான்மைப் பொருளியலைத் தம் சார்பில் வைத்துக் கொண்டிருக்கும் தமிழினத்தவர்களுக்கும், பிற சிறு அளவு இந்திய இனத்தவர்க்கும் ஓர் இக்கட்டான சூழ்நிலை உருவாகியுள்ளது. (பிசியிலுள்ள பெரும்பான்மையான தமிழின மக்களை முகாமைப் படுத்தக்கூடாது என்னும் கரவான எண்ணத்தால், இணையமுடியாத அங்குள்ள அனைவரையும் செயற்கையாக ஒன்றுக்கி, '**இந்தியர்**' '**இந்தியர்**' என்று செய்திகளில் கூறி, இவ்விந்திய அரசு தமிழினத்தின் தனித் தன்மையை மறைக்கவும் அழிக்கவும் பார்ப்பதை நாம் விழிப்பாகக் கவனிக்க வேண்டும்.) நாளடைவில் பிசியின் ஆட்சியதிகாரத்தைத் தமிழர்களும் பிற இந்திய இனச் சிறுபான்மையரும் கைப்பற்றிவிட வாய்ப்பளிக்கக் கூடாது என்பதே **ரபூகா** போன்ற பிசித் தேசியப் பழங்குடிகளின் அச்சமாகும். (இந் நிலையில், அங்குள்ள பிசியின் தேசியப் பழங்குடிகளைப் போலவே தமிழினமும் அங்கு மிகப் பழமை வாய்ந்த பழங்குடியினர் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.)

ஏற்கனவே, தமிழர்களுக்குப் பர்மாவிலும், சிங்கை, மலேசிய நாடுகளிலும் பெரும்பான்மைத் தவிர்ப்பு முயற்சிகள் நடந்து, அங்கிருந்த தமிழர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி விடாமல் செய்யப்பட்டு, அவ்வகையில் மிகப் பலர் நாட்டை விட்டு வெளியேற்றவும் பட்டிருக்கிறார்கள், என்பதையும் நாம் எண்ணிப்பார்த்தல் வேண்டும். அத்துடன் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கை போன்ற நாடுகளிலும் தமிழர்கள் உயிர் வாழ்வதற்கு ஓர் அஞ்சத்தக்க சூழல் உருவாகியிருக்கிறதையும் நாம் அனைவரும் அறிவோம்.

இவ்வாறு தமிழினத்துக்கு நாளுக்கு நாள் நாட்டுக்கு நாடு, சீரழிவு தொடர்ந்து நடந்து கொண்டேயிருப்பதையும், அது இங்குள்ள தாய்த் தமிழர்களுக்கும் இனி எதிர்காலத்தில் வராமலிருக்கும் என்பதற்கான உறுதி இல்லாமலிருப்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறு எண்ணிப் பார்ப்பதன் வழிதான், இங்குள்ள தமிழர்கள் சாதி, மதம் தவிர்ந்த ஒரே மொழி இனமாக ஒன்றுபட்டுத் தங்களை வலுப்படுத்தும் முயற்சிகளில் இப்பொழுதிலிருந்தே ஒரு முனைப்பைக் காட்ட வேண்டும் என்பதையும், நாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கவும் செயல்படவும் வேண்டும். O

நூல் நலம்:

நூல் : 'தமிழினமீட்சி'—ஒரு வரலாற்றுப் பார்வை.
ஆசிரியர் : குணா.
வெளியீடு : தமிழக ஆய்வரண் (F.O.R.T.) 48, டிசுபென்சரி சாலை, பெங்களூர்—560001.

46 பக்கங்கள்; அன்பளிப்பு: உருபா 4-00.

தமிழினம் ஒரு **தனித் தேசிய இனம்.** இக் கருத்து இன்று எவராலும் வீழ்த்தப்பட இயலாத அளவுக்கு வேர்பாய்ச்சி வளர்ந்துள்ளது; ஏனெனில் உண்மைக்கு மட்டுமே உறுதி நிலைக்கும்.

இக் கருத்து வெகு காலத்திற்கு முன்பே உணரப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் தமிழர்கள் தம்மைப் பற்றிய உண்மைகளை உணரா வண்ணம் பல தடைகள் மறித்து நின்றன. அத்தடைகளில் ஆரிய மாயையின் வன்பிடி எத்தகையது என்பதைப் பலரும் நன்கறிவர். எனினும் திராவிடக் கருத்தின் மாயைத் தன்மையினையும், அது தமிழினத்தை அலைக்கழித்து வந்ததையும்—வருகின்றதையும்—சாலம் உணர்த்தி விட்டது.

ஒரே அரசின் கீழ் அமையாது பல அரசுகள் அமைத்துக் கொண்டு, தம் அடிமைத் தனத்தை உணராமல் ஆர்ப்புறு திறல் விளங்கிய பண்டை வேந்தர்களின் காலம் முதல், தமிழக விடுதலைக் கருத்து கால் கொண்டுவரும் இக் காலம் வரை தமிழின மீட்சிப் பாதை வளர்ந்து வரும் வரலாற்றில் நம் பார்வையினைப் பதிய வைக்கிறது இச் சிறிய அரிய நூல்.

ஆங்கிலேயர் வருகைக்குப் பின் நிகழ்ந்து வரும் பெரும் மாறுதல்கள் நன்றாக விளக்கப் பட்டுள்ளன. உண்மையான தமிழ் இன உணர்வு கொண்ட அனைவரும் வாங்குக; பாங்குறப் பயில்க; மனத்தில் இருத்துக; வாயுற மொழிக; செயலாய் மலர்த்துக. —மருத்துவர்.

நூல்: **காக்கை விடு தூது.**
ஆசிரியர்: **பாந்தளூர் வெண்கோழியார்.**
16 பக்கங்கள்; விலை: ஓர் உருபா.
கிடைக்குமிடம்: **சிவகாமி பதிப்பகம்,** அண்ணாமலை நகர்.

இந்திய விடுதலைக்கு முந்திய காலம். **இராசாசி** சென்னை மாநில முதலமைச்சர். பள்ளிகளில் தாய்மொழி கட்டாயப் பாடம் இல்லை. அந்நிலையில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார் இராசாசி. எதிர்த்தவர்களை வெஞ்சிறையிலிட்டு வதைத்தார். தந்தை பெரியார், துறவிகள், புலவர்கள், பெண்கள் சிறையேகினர். அக்கால், "தந்திரத்தினாலே தமிழர்களை ஏய்க்க முதல் மந்திரியாய் வந்தீர்; ஆசை மறைக்க அறிவழிந்தீர்; வசை நீங்கி வாழ்வீர் அல்லது போரியற்றக் கைதாரீர்" எனக் கூறிப் போர்க்குக் கைவழங்கி வருமாறு இராசாசியிடம் காக்கையைத் தூதனுப்பும் சிறு இலக்கியம் இது. 1939-இல் வெளியான இது மறு பதிப்பாக வெளிவந்துள்ளது. —மருத்துவர்.

செய்தி வெளியிடுவதில் அவாள் எச்சரிக்கை!

மேழம் (சித்திரை) மாதம் முதல் நாள் புலர்ந்தது. தமிழகத்திலுள்ள எல்லா ஏமாளித் தமிழரும் 'தமிழ்ப் புத்தாண்டி'னை மகிழ்ச்சியாகக் கொண்டாடினர். ஆனால் சென்னை வேப்பேரியில் உள்ள புளியந்தோப்பில் மட்டும் தமிழ்ப் புத்தாண்டு குருதியில் குளியல் செய்யப்பட்டது. 'ஆமை புகுந்த கிணறும் அமினா புகுந்த வீடும் உருப்படா' இது தமிழகத்தில் வழங்கும் சொலவடை. இதனோடு நாம் 'ஆர். எசு. எசு. புகுந்த நாடும்' என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

'இராமஜன்ம' நிலப்பகுதியில் வெறியாட்டம், மண்டைக் காட்டில் குருதியோட்டம் என்று சென்ற விடமெல்லாம் கொடுஞ்செயல் புரியும் ஆர். எசு. எசு. தற்போது சென்னையில் திட்டமிட்ட வெறியாட்டத்தை நடத்தியுள்ளது. தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு ஆர். எசு. எசு. அணிவகுப்பு ஒன்று வேப்பேரியில் நடந்தது. இவர்கள் அணிவகுப்பு சென்றவழி முகமதியர்களின் மசூதிகள் நிறைந்த பகுதி. மசூதிகளின் வழியே செல்லும்போது இவர்கள் வேண்டுமென்றே பேரிகை முழங்கச் சென்றுள்ளனர். விளைவு? ஒருவர் இறப்பு; 92 பேர் தளை (கைது) செய்யப்பட்டனர்.

இந்தச் செய்தியை இரண்டாகப் பிரித்து வெளியிட்டது அவாளின் ஏடு தினமணி. முதல் செய்தியில் ஆர். எசு. எசு. காரர்கள் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு ஓர் ஊர்வலம் நடத்தினர். அதில் வழக்கமான வாழ்க, ஒழிக முழக்கங்களின்றி முரசுக்கேற்றபடி அணி வகுத்துச் சென்றனர் என்று பாராட்டுகிறது.

அடுத்த செய்தியில் " 'ஒரு சமூகம்' தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு அணிவகுத்துச் சென்றது. அது சென்ற வழியில் வேறொரு 'சமூகத்தி'னரின் கோயில் உள்ளது. அதன்வழியே சென்றதால் சினமடைந்த 'அந்தச் சமூகத்தினர்' கூட்டம் முடிந்து வரும்போது வழிமறித்தார்கள்..." என்று பெரிய செய்தியையே தந்தது. ஒரு இடத்தில் கூட அந்தச் சமூகம் 'பாப்பனச் சமூகம்' என்பதைச் சுட்டிக் காட்டவே இல்லை. பூணூல் வளையம் அவர்களைப் பிணைக்கிறது; தமிழரைப் பிரிக்கிறது. இதைத் தமிழர்கள் உணர்வார்களா?—தமிழ்முகிலன்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

Scanned with CamScanner

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கொள்கையில் விரல்விட்டு எண்ணக் கூடிய வசதிபடைத்த சிலர் மட்டுமே பயனடைய மாதிரிப் பள்ளிகள்! கல்வித் துறையில், தனியார்கள் புகுந்து சூறையாட விரிந்து, பரந்த வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது, அரசு.

ஏழை மக்கள் பயன்படுத்தி வந்த மலிவு விலைத் துணி உருவாக்கத்தை ஒழித்துக் கட்டியது-தான் **புதிய துணிக் கொள்கை.** பருத்தியைப் பயன்படுத்தித் துணி நெய்தவர்களின் வாயில் மண் அள்ளிப் போட்ட இந்தக் கொள்கை, பணக்காரர்கள் பயன்படுத்தக் கூடிய விலை உயர்ந்த செயற்கைப்பட்டு(Poliyester) மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட செயற்கை இழையைப் பயன்படுத்தித் துணி உருவாக்கம் செய்யும் தொழில் துறைக்குத் துணையான திட்டங்களை அளித்துள்ளது.

வெளிநாட்டு முலப்பணங்களை நுழையவிட்டு, இந்திய மக்கள் உழைப்பையும், விளைச்சலையும் சுரண்டிக் கொண்டுபோக வழியமைத்துத் தருவதே இந்தப் **புதிய தொழிற் கொள்கை.** மற்ற கொள்கைகளினுல் அலையவிடப்பட்ட ஏழை இளைஞர்களுக்கு தொழிலூக்க உதவி என்று கடன் அளித்து, அதன்வழி முதலாளிய உருவாக்கப் பொருள் விற்பனையைப் பெருக்கி, இம் மக்களின் உணவுப் பொருள் விளைவிப்புக்கு எதிரான நிலையில் இயங்குவதே இந்தப் புதிய தொழிற் கொள்கை.

இந் நிலையில் எல்லாவற்றையும் விஞ்சி, இந்தப் புதிய மருந்துக் கொள்கை இந்த மக்கள் மீது பாய்கிறது. பணவெறி பிடித்த 'வெளிநாட்டுப் பகற் கொள்ளையர்'களின் குழுமங்களை நிறைவு செய்ய நாட்டு மக்களின் நலத்தையே—உயிரையே தாரை வார்ப்பதுவே இப் புதிய மருந்துக் கொள்கை. (தொடரும்.)

விடுதலைப் போருக்கு நாள் குறித்திடுவாய்!

பாவலர். தமிழ்க்குமரன்:

உண்ணப் போகுமுன் உறங்கப் போகுமுன்
பண்ணும் தொழிலில் பணிமனை அலுவலில்
விடுதலை எண்ணம் மேலோங்க வேண்டும்!
கொடுமையை எதிர்த்துநாம் போராட
வேண்டும்!

இரந்து நிற்பது இழிவு நமக்கு!
உரத்த குரலில் உரிமையை முழக்கு!
சோற்றுப் பிண்ட மாயிருக் காதே.
போற்று விடுதலை! போற்று தன் மானம்!!

பொய்யேந்தி வந்தவர் பொலிந்து சிறக்கக்
கையேந்தி நிற்பதே கண்ணியத் தமிழன்!
ஞாலங் கருதினும் கைகூடு மென்றுர்.
காலங் கருதிக் கடமை யாற்றின்,
நாள்குறித் திடுவாய் விடுதலைப் போர்க்கு!
தோள்வலி காட்டித் துடிப்புடன் ஆர்த்துத்
துச்சம் உயிரெனத் துந்துபி முழக்கி
மெச்சும் படிநீ மீட்பாய் நாட்டையே!

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 5

தமிழ்நாட்டை மீட்காமல் தமிழினத்தை முன்னேற்ற முடியாது.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண். 86 TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: **நூல் அஞ்சல்**
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.